# இறைவன் என்னைப் பற்றி என்ன நினைக்கின்றார்?

ஒருவேளை நீங்கள் இக் கேள்வியை ஒருபோதுமே உங்களிடம் கேட்காமல் இருந்திருக்கலாம். சிலநேரம், இறைவனைப் பற்றிச் சிந்திப்பதே உங்களுக்கு அதிக முக்கியமானதாகத் தோன்றலாம். ஆனால், நீங்கள் அவரை ஆளகிறவராகவும், நியாயம்



விசாரிப்பவராகவும் கருதினால் (ஆதி 18:25 அப்போ 17:30, ஏசாயா 45:18-22) ஒருநாள், நீங்கள் அவரின் முன்னிலையில் உங்கள் வாழ்க்கைக்கான கணக்கை ஒப்புவிக்க வேண்டுமாதலால், **இறைவன் என்னைப் பற்றி என்ன நினைக்கிறார் என்பது மிகவும் முக்கியமான கேள்வி அல்லவா?**

இறைவன் என்னைப் பற்றி நன்றாகவே சிந்திக்கிறார், ஏனென்றால் என்னுடைய வாழ்க்கையின் விடயங்கள் நன்றாகவும் செழிப்பாகவும் செல்கின்றது என்று நீங்கள் சொல்லலாம். ஒரு வழியில் நீங்கள் சொல்வது சரியாகவும் இருக்கலாம். வேதத்தில் லூக்கா 6:35இல் தேவன் எல்லோர் மேலும் இரக்கம் உள்ளவர் என்கிறது. நாங்கள் அன்றாடம் உண்ணுகிற உணவு, நாங்கள் உள்ளெடுக்கின்ற சுவாசம், எங்களுக்கு கிடைக்கின்ற எல்லாம் இறைவனிடம் இருந்து கிடைக்கின்றவையாகும். ஆம் அவர் எல்லாரின் மேலும் இரக்கம் கொண்டவர். ஆனால் அதே வசனம் அவர் பாவிகளின் மேல் இரக்கம் உள்ளவர் என்கிறது. திருடர்கள், கொள்ளையர்கள் மற்றும் கொடூரமான பாவங்களை செய்கிறவர்களும் உணவருந்தி சுவாசித்து வாழ்கின்றார்கள். ஏனென்றால் இறைவன் இரக்கம் உள்ளவர். அவரது இந்தக் கிருபை அவர்கள் அவரிடம் திரும்ப வேண்டும் என்பதற்காவேயாகும். ஆகையால் *'இறைவன் என்னை பற்றி என்ன நினைக்கிறார்'* என்பதில் இன்னும் அனேக விடயங்கள் அடங்கியிருக்கின்றன.

இந்த கேள்விகளுக்கான பதிலை சிந்திக்கின்ற வேளையில் இவற்றையும் சற்று சிந்தித்துப் பாருங்கள்:


**இறைவன் பரிசுத்தமானவர்** - (ஏசாயா 6:3, வெளிப்படுத்தல் 15:5, பேதுரு 1:15-16 ) பரிசுத்தம் என்பது அவர் தன்னுடைய குணத்தில் பரிசுத்தர் என்பதையும், முழுமையாக நல்லவர் என்பதையும் அர்த்தம் கொள்கிறது. நன்மையை நேசித்து தீமையை வெறுக்கிறார். பரிசுத்தம் என்பது அன்பு, உண்மை, பாலியல் தூய்மை, நல்ல சிந்தனை, தூய்மையான பேச்சு, அதிகாரங்களை மதித்தல், தேவபக்தியான வாழ்க்கை போன்ற நன்மையானவைகளை அவர் விரும்புவதைக் (இறைவனை அன்பு செய்தல், இறைவனை மதித்தல், இறைவனை ஆராதித்தல், அவரது கட்டளைகளைக் கைக்கொள்ளுதல்) குறிக்கிறது. பரிசுத்தம் என்பது பொய், களவு, பாலியல் ஒழுக்கமின்மை, கெட்ட வார்த்தை, பெருமை, தேவபக்தியற்ற வாழ்க்கை (இறைவனை அன்பு கூராமை, இறைவனைக் கனப்படுத்தாமை, இறைவணக்கமின்மை, அவரது கட்டளைகளுக்குக் கீழ்ப்படியாமை) போன்றவற்றை வெறுப்பதாகும். இவற்றைத்தான் வேதாகமம் பாவம் என்றழைக்கின்றது (1யோவான் 3:4, ரோமர் 1:18-32, கலாத்தியர் 5,19-21).

**இறைவன் நீதியானவர் -** இறைவன் (1 பேதுரு 1:17, ரோமர் 2:5-11, ரோமர் 1:32) பாவத்தை வெறுப்பது மாத்திரமல்லாமல் பாவமனைத்தையும் தண்டிப்பவராகவும் இருக்கிறார். *பாவம் செய்கிற ஆத்துமாவே சாகும்* என்று (எசேக்கியேல் 18:20) அவர் சொல்லியிருக்கிறார். இறைவன் தன் வசனத்தை எப்போதும் காக்கிறவர். ஆகையால் பரிசுத்த இறைவன் வெறுக்கின்றவற்றை செய்கிறவர்களை நிச்சயமாகத் தண்டிப்பார். அந்த தண்டனை மரணமாகும். இறைவனது வேதத்தில் மரணம் என்பது சரீரத்தில் மரிப்பதோடு நித்தியமாக அக்கினிமயமான நரகத்தில் மரணத்தை அனுபவிப்பதுமாகும். (மத்தேயு 18:8-9, மத்தேயு 25:46, 2 தெசலோனிக்கேயர் 1:6-10, வெளி 14:11).

எனவே, உங்களிடம் ஒரு கேள்வியை கேட்டுப்பாருங்கள், **'நான் பாவம் செய்கிறேனா?'** உங்களின் பதில் ஆம் என்றால் உங்களின் மேல் இறைவன் கடுமையாக கோபமாயிருகிறார் நீங்கள் அந்நிலையில் தொடர்ந்தீர்கள் என்றால் சரீர மரணத்திலும், நித்திய மரணத்திலும் உங்களைப் போட்டுவிடுவார். ஆகவே

நீங்கள் பெரிதானதோர் ஆபத்தில் இருக்கிறீர்கள். சிந்தியுங்கள்! இறைவன் வெறுக்கின்றவைகளை நீங்கள் செய்வீர்களானால் அவர் உங்களின் மேல் கடுமையாக கோபம் கொண்டிருக்கிறார். அவர் நிச்சயமாக உங்களைத் தண்டிப்பார். இது எந்த நேரத்திலும் நிகழலாம். மக்கள் நாள் தோறும் மரிக்கின்றனர். இறைவனின் பொறுமை நாளை உங்களிடமிருந்து விலகி விட்டால் என்ன நடக்கும்?

**கடவுள் அன்பாயிருக்கிறார்.** (1 யோவான் 4:8, 1யோவான் 4:16 யாத்திராகமம் 34:6-7, யோவான் 3:16) அன்பும் பரிசுத்தமுடைய ஆண்டவர் விலைமதிப்பற்ற வெகுமதியொன்றை தருகிறார். அவர் உங்களின் பாவங்கள் யாவும் மன்னிக்கப்படும் வெகுமதியை அளிக்கிறார். எல்லா பாவங்களையும் கோபப்படாமலும் உங்களை நரகத்திற்கு போடாமலும் இருப்பதற்கு வெகுமதியொன்றை தருகிறார். அவர் நீதியானவர் ஒருபோதும் பாவத்தை மன்னிக்கிறவர் அல்ல என்று நீங்கள் வாதிடலாம். அது குற்றவாளியைத் தப்பவிடுவதுபோலாகும் என்று நீங்கள் கூறலாம். அதில் உங்கள் வாதம் சாரம் பெற்றதாகவும் இருக்கலாம். இறைவன் அப்படியாகச் செயல்படுகிறவரல்ல. **பாவமற்ற ஒருவர் எங்களின் பாவங்களுக்காக தண்டிக்கப்பட்டு** அந்த வெகுமதியை ஏற்றுக்கொள்ள அழைக்கின்றார். **அது அவரின் ஏக சுதன் இயேசு கிறிஸ்து.**




இது தான் சிலுவை சொல்லும் செய்தி. கிறிஸ்து பாவிகளின் பிரதிநிதியாக சிலுவையில் மரித்தார். (2கொரி 5:21, ரோமர் 5:10, கலாத்தியர் 3:10-14) கிறிஸ்துவை விசுவாசிக்கும் அனைவருக்கும் ஒரு இரட்சகர் உண்டு. அவர்களது இடத்தில் இயேசு மரித்ததாக கிறிஸ்துவில் அவர்களது கணக்கு வைக்கப்படுகிறது. கிறிஸ்து சிலுவையில் வேதனைப்பட்டு மரிதித்தின் ஊடாக பரிசுத்தமும் நீதியுமுள்ள இறைவனின் கோபம் முழுமையாக நீக்கப்பட்டுவிட்டது. கிறிஸ்து தண்டிக்கப்பட்டார், பாவிகள் மீட்கப்படுகின்றனர். கிறிஸ்து குற்றப்படுத்தப்படுகிறார், பாவிகள் மன்னிக்கப்படுகின்றனர். ஆகவே, இறைவன் பாவிகளை ஒருபோதும் பாவம் செய்யாதவர்களாகவே காண்கிறார்.

இயேசு கிறிஸ்துவினூடாக பாவிகள் நீதிமானாக்கப்படுகின்றனர். (ரோமர் 3:19-26, கலாத்தியர் 2:16, ரோமர் 5:18) இறைவனின் நீதி திருப்திப்படுத்தப்பட்டது, அவரின் ஊடாக அவன் அல்லது அவள் தேவனுக்குப் பிரியமாக்கப்படுகின்றனர். அந்த நபரின் உறவு நித்திய ஜீவனடையும் படி சரியாக்கப்படுகிறது. பூரண சந்தோசத்துடனும் களிப்போடும் நித்தியமாய் அவருடன் ஜீவிக்க அவர்கள் பரலோகம் செல்கின்றனர். அந்த நபர் தேவனுடன் சரியான உறவில் உள்ளார்.

**இறைவனுடனான உங்களுடைய உறவு எப்படியிருக்கின்றது?** இறைவன் உங்களை நோக்கும் போது, கோபத்திற்கு பாத்திரராக காண்கிறாரா அல்லது சுத்திகரிக்கப்பட்ட பாவங்கள் மன்னிக்கப்பட்டவனாக காண்கிறாரா? **'இறைவன் உங்களைப் பற்றி என்ன நினைக்கின்றார்?'**

சிலநேரம் நீங்கள் கேட்கலாம். 'எப்படி என்னுடைய உறவை இறைவனிடம் சரி செய்வது'. இதற்கான பதில் இரண்டு பகுதிகளில் உள்ளது.



முதலாவது, **மனம் திரும்பு** (அப்போஸ்தலர் 2:37-39, 17:30-31, லூக்கா 24:45-48)

அதாவது, உமது வாழ்வில் இறைவனைக் கோபப்படுத்துகின்ற எல்லாவற்றிலிமிருந்து திரும்ப வேண்டும். அவற்றை இனிமேலும் செய்ய வேண்டாம். அவற்றிலிருந்து விலகி வந்துவிட வேண்டும். அவற்றை திரும்ப செய்ய நினைக்கவும் வேண்டாம். உங்களுடைய பாவம் எதுவாயிருந்தாலும் அதைவிட்டு விலகி வந்துவிடுங்கள்.

இரண்டாவது, கிறிஸ்துவை இரட்சகரென்று **விசுவாசியுங்கள்.** (அப்போ 16:30-34, யோவான் 3:14-21, எபேசியர் 2:8-10) இது அவரைக்குறித்தான மேன்மையான மதிப்பான ஒரு எண்ணம் கொண்டிருப்பதைவிட வித்தியாசமானதாகும். இது அவரை விசுவாசித்தல், ஏற்றுக்கொள்ளுதல், உங்களுடைய நித்திய வாழ்க்கைக்காக ஒரே நம்பிக்கையான அவரின் மேல் விசுவாசம் கொள்ளுதலை அர்த்தப்படுத்துகின்றது. அவரிடம் வருகிற எவருக்கும் அவர் மன்னிப்பையும், மீட்பையும் நித்திய வாழ்க்கையையும் கொடுக்கின்றார். நீங்கள் உண்மையாக அவரிடம் வரும் போது ஒருபோதும் உங்களை விட்டு விலகமாட்டார். மக்கள் கிறிஸ்துவிடம் வரும்போது, அவர்களுடைய சகல பாவங்களும் மன்னிக்கப்பட்டு, இறைவனின் பார்வையில் நீதிமானாக்கப்படுகின்றனர். இப்பொழுது அவர்களை குறித்து இறைவன் என்ன நினைக்கிறார் என்பதை சிந்தித்துப் பார்க்க முடியும். ***"என்னுடையவர்கள், என் பிள்ளைகள், என்னுடைய பரிசுத்தமானவர்கள், என்னுடைய கண்மணி".*** அவரோடு கூட நித்தியத்தில் வாழும் பரலோக வாழ்க்கையை கொடுக்கிறார்.

இந்த கேள்வியை சற்று ஆழமாக சிந்தியுங்கள். **உங்களை குறித்து இறைவன் என்ன நினைக்கிறார்?** இந்த கேள்வியின் பதிலிலே உங்களுடைய வாழ்க்கையின் நித்தியத்துவம் அடங்கியிருப்பதை காண்கிறீர்களா? பரலோகமா அல்லது நரகமா, சந்தோஷமா அல்லது துன்பமா, இறைவனால் ஏற்றுக்கொள்ளப்படுவதா அல்லது நிராகரிக்கப்படுவதா, மன்னிக்கப்பட்டவரா அல்லது குற்றமுள்ளவரா இவையெல்லாம் இறைவன் உங்களைப் பற்றி என்ன நினைக்கிறார் என்பதில் தங்கியிருக்கின்றது. உங்களுடைய நித்தியத்தைப் பற்றி முடிவெடுக்க உங்களை அவசரப்படுத்துகிறேன். இயேசு கிறிஸ்துவிடம் சேருங்கள். அவரை விசுவாசியுங்கள். அப்பொழுது காக்கப்படுவீர்கள்.

***கர்த்தரைக் கண்டடையத்தக்க சமயத்தில் அவரைத் தேடுங்கள்,***
***அவர் சமீபமாயிருக்கையில் அவரை நோக்கிக் கூப்பிடுங்கள்.***

***துன்மார்க்கன் தன் வழியையும், அக்கிரமக்காரன் தன் நினைவுகளையும் விட்டு,***
***கர்த்தரிடத்தில் திரும்பக்கடவன் அவர் அவன்மேல் மனதுருகுவார்,***
***நம்முடைய தேவனிடத்திற்கே திரும்பக்கடவன்***
***அவர் மன்னிக்கிறதற்குத் தயை பெருத்திருக்கிறார்.***

***என் நினைவுகள் உங்கள் நினைவுகள் அல்ல,***
***உங்கள் வழிகள் என் வழிகளும் அல்லவென்று***
***கர்த்தர் சொல்லுகிறார்.***

***பூமியைப்பார்க்கிலும் வானங்கள்***
***எப்படி உயர்ந்திருக்கிறதோ,***
***அப்படியே உங்கள் வழிகளைப்பார்க்கிலும் என் வழிகளும்,***
***உங்கள் நினைவுகளைப் பார்க்கிலும்***
***என் நினைவுகளும் உயர்ந்திருக்கிறது.***

**எசாயா 55:6-9**